### முதல்வர் மு.க.ஸ்டாலினின் சீரிய நடவடிக்கையால் - உலகளாவிய திறன் மையங்கள் மூலம் மூன்றாண்டில்

# 50 ஆயிரத்திற்கும் மேற்பட்டோருக்கு உயர்தர வேலைவாய்ப்புகள்!

## தமிழ்நாடு அரசு அறிவிப்பு - இளைஞர்கள் மகிழ்ச்சி !

**சென்னை, ஜூலை 19-**

**முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சீரிய நடவடிக்கையால் தமிழ்நாட்டில் பன்னாட்டு நிறுவனங்கள் அமைத்துள்ள உலகளாவிய திறன் மையங்கள் மூலம் கடந்த மூன்று ஆண்டுகளில் மட்டும் 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட உயர்தர வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளதால் இளைஞர்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். மேலும் உலகளாவிய திறன் மையங்களை கோவை மற்றும் மதுரையிலும் அமைக்க விரும்பும் நிறுவனங்களுக்குத் தேவையான வசதிகள் செய்து தரப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.**



தமிழ்நாட்டின் முதலமைச்சராக 2021ஆம் ஆண்டு மே 7ஆம் தேதி அன்று பொறுப்பேற்ற முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமிழ்நாட்டில் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்கிட வேண்டும் என்ற எண்ணத்தில் முனைப்புடன் செயல்பட்டு பல்வேறு பன்னாட்டு நிறுவனங்களை தமிழ்நாட்டில் தொடங்கிட முன்னெடுப்புப் பணிகளை மேற்கொண்டார்.

**முதலீட்டாளர்களின் முதல் முகவரி தமிழ்நாடு!**

அதன்படி 2030-ஆம் ஆண்டுக்குள் தமிழ்நாட்டினுடைய பொருளாதாரத்தை 1 டிரில்லியன் அமெரிக்க டாலர் அளவுக்கு உயர்த்தவேண்டும் என்னும் ஒரு இலட்சிய இலக்கை நிர்ணயித்து அந்த இலக்கை எய்தும் வகையில் உயர் தொழில்நுட்பம் சார்ந்த தொழில் முதலீடுகளை ஈர்ப்பது மற்றும் வேலை வாய்ப்புகள் மிகுந்த முதலீடுகளை ஈர்ப்பது என்ற வகையில் “முதலீட்டாளர்களின் முதல் முகவரி தமிழ்நாடு” என்ற இலட்சியத்துடன் முதல்வர் அவர்கள் செயல்பட்டு வருகிறார்.

**30 இலட்சம் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு!**

அந்த வகையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் சென்னை, கோவை, தூத்துக்குடி ஆகிய இடங்களிலும், மலேசியா, சிங்கப்பூர், ஜப்பான், ஸ்பெயின் ஆகிய நாடுகளிலும் நடத்தப்பட்ட முதலீட்டாளர்கள் மாநாடுகள் வாயிலாக மொத்தம் 9.61 இலட்சம் கோடி ரூபாய் முதலீடுகள் ஈர்க்கப்பட்டு ஏறத்தாழ 30 இலட்சம் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்குவதற்கான ஒப்பந்தங்கள் நடைபெற்று இதுவரை தொழில் வளர்ச்சி வரலாற்றில் இல்லாத ஒரு மாபெரும் புரட்சி நிகழ்த்தப்பட்டுள்ளது.

முதலமைச்சர் அவர்கள், ஆட்சிப் பொறுப்பேற்ற பின், 45 தொழிற்சாலைகளுக்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. 27 தொழிற்சாலைகள் திறந்து வைக்கப்பட்டுள்ளன. இவற்றின் மூலமாக 74 ஆயிரத்து 757 இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகள் அளிக்கப்பட்டுள்ளன. திராவிட மாடல் அரசால் தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்கக் கொள்கை 2009-2023-ல் முதலமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்டது. 2021ஆம் ஆண்டு வரை தமிழ்நாட்டில் பதிவு செய்யப்பட்ட ஸ்டார்ட் அப் நிறுவனங்களின் எண்ணிக்கை 2,032. இன்றைய நிலவரப்படி இது 4 மடங்கிற்கும் மேல் அதிகரித்து 8,416ஆக உயர்ந்துள்ளது. மகளிர் ஸ்டார்ட்அப்களின் எண்ணிக்கை 2021-ஆம் ஆண்டில் 966 ஆக இருந்தது, தற்போது மூன்று மடங்குக்கு மேல் அதிகரித்து 3,163 ஆக உயர்ந்துள்ளதே இந்த அரசின் செயல்பாட்டிற்குக் கிடைத்த வெற்றியாகும்.

**ஒன்றிய அரசு வெளியிட்ட பட்டியலில் தமிழ்நாடு முதல் நிலை!**

ஸ்டார்ட் அப் நிறுவனங்களுக்கு உகந்த சூழலைக் கட்டமைத்துச் செயல்படும் மாநிலங்களின் பட்டியலை ஒன்றிய அரசு வெளியிட்டது. இதில் தமிழ்நாடு முதல் நிலையை பிடித்திருப்பதிலிருந்தே இந்த அரசின் சாதனையைத் தெளிவாகப் புரிந்துகொள்ளலாம்.

**உலகளாவிய திறன் மையங்கள்!**

இந்நிலையில் தமிழ்நாடு அரசின் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு கொள்கையின்படி மாநிலத்தில் பன்னாட்டு நிறுவனங்களின் உலகளாவிய திறன் மையங்களை திராவிட மாடல் அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

அதன்படி இந்த மையங்களில் அதிக ஊதியம் அளிக்கக்கூடிய பணியிடங்களுக்கான ஊதிய பட்டியல் மானியத்தை தமிழ்நாடு அரசு வழங்கி வருகிறது.

இதன் காரணமாக கடந்த 3 ஆண்டுகளில் 40 நிறுவனங்கள் தமிழ்நாட்டில் தங்களது உலகளாவிய திறன் மையங்களை அமைத்துள்ளன.

இதன் மூலம், 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட உயர்தர வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன.

**வேலைவாய்ப்பு பெற்ற இளைஞர்கள் மகிழ்ந்து முதல்வருக்கு நன்றி தெரிவித்துள்ளனர்!**

இந்த மாத தொடக்கத்தில், Astra Zeneca நிறுவனம் சென்னையில் உள்ள அதன் உலகளாவிய திறன் மையத்தை விரிவாக்கம் செய்வதாக அறிவித்துள்ளது.

உலகளவில் AstraZeneca நிறுவனத்தின் மிகப்பெரிய மையமாக சென்னை மையம் திகழ உள்ளது.

இதைத் தவிர்த்து, ஃபைசர், உலக வங்கி, ஸ்டாண்டர்டு சார்ட்டர்டு, ஹிட்டாச்சி எனர்ஜி, ரெனால்ட் நிசான், அடிடாஸ், கேட்டர் பில்லர் போன்ற உலகளாவிய முன்னணி நிறுவனங்கள் தங்களின் மிகப்பெரிய திறன் மையங்களை தமிழ்நாட்டில் அமைத்துள்ளன.

**10 மில்லியன் சதுர அடியில் பன்னாட்டு நிறுவனங்கள்!**

கடந்த 2023ம் ஆண்டில் மட்டும் இதுவரை இல்லாத அளவில் சுமார் 10 மில்லியன் சதுர அடியில் பன்னாட்டு நிறுவனங்கள் தங்களின் திறன் மையங்களை சென்னையில் அமைத்துள்ளன.

**கோவை, மதுரையிலும் அமைய அழைப்பு!**

இதேபோன்று கோவை மற்றும் மதுரையிலும் உலகளாவிய திறன் மையங்களை அமைக்க விரும்பும் நிறுவனங்களுக்கு தேவையான அனைத்து வசதிகளையும் செய்து தர தயாராக உள்ளதாக தமிழ்நாடு அரசின் தொழில் துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

---

### செஞ்சி தொகுதியில்

## 6000 நபர்களுக்கு இலவச வீட்டு மனை பட்டாக்கள் வழங்கல்!

### அமைச்சர் செஞ்சி மஸ்தான் தகவல்!

*செஞ்சி, ஜூலை 19-*

தமிழ்நாடு அரசின் சேவைகள் பொதுமக்களை விரைவாகவும் எளிதாகவும் சென்று சேர்ந்து சென்றிடும் வகையில் செயல்படுத்தப்பட்டுள்ள மக்களுடன் முதல்வர் திட்ட முகம் ஊரகப் பகுதிகளில் கடந்த 11ஆம் தேதி தர்மபுரியில் முதலமைச்சர் தொடங்கி வைத்துள்ளார் .

இதை அடுத்து விழுப்புரம் மாவட்டம் மேல்மலையனூர் ஒன்றியம் கூடுவாம்பூண்டி ஊராட்சியில் மக்களுடன் முதல்வர் திட்டம் தொடங்கப்பட்டது.

விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் டாக்டர் பழனி தலைமையில் கூடுதல் ஆட்சியர் வளர்ச்சி ஸ்ருதன் ஜெய் நாராயணன், மேல்மலையனூர் ஒன்றிய பெருந்தலைவர் கண்மணி நெடுஞ்செழியன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சிறுபான்மை யினர் நலன் மறறும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு மக்களுடன் முதல்வர் திட்டத்தினை தொடங்கி வைத்து பொதுமக்களிடம் இருந்து வரப்பெற்ற கோரிக்கை மனுக்களை பெற்று கணினி மூலம் பதிவு செய்வதற்காக அவர் அறிவுறுத்தினார்.

தொடர்ந்து வருவாய் துறை மூலம் 104 நபர்களுக்கு இலவச வீட்டு மனை பட்டாக்கள், 14நபர்களுக்கு உழவர் பாதுகாப்பு திட்டம் மூலம் நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்புரை ஆற்றினார்.

நிகழ்ச்சியில் பேசிய அமைச்சர் செஞ்சி மஸ்தான்,

பேரறிஞர் அண்ணா, முத்தமிழ் அறிஞர் கலைஞர், வழியில் தமிழ்நாடு முதலமைச்சர் ஆட்சி பொறுப்பை ஏற்று மூன்று ஆண்டுகளில் பல்வேறு திட்டங்களை நிறைவேற்றி வருகிறார்.

அந்த வகையில் பொது மக்களுக்கு வேண்டிய அனைத்து சேவைகள் மற்றும் கோரிக்கைகள் விரைவாக நிறைவேற்றிட வேண்டும் என்ற வகையில் மக்களுடன் முதல்வர் திட்டத்தை தமிழ் நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் ஊரகப் பகுதிகளில் செயல்படுத்துவதற்குஉத்தரவிட்டு தர்மபுரியில் தொடங்கி வைத்துள்ளார்.

ஊரகப் பகுதிகளில் வசிக்கும் பொதுமக்கள் அதிகமாக அணுகும் 15 அரசுத்துறைகள் சார்ந்த 44 சேவைகள் மீது தீர்வு காணப்பட்டு இம் முகாம்கள் ஊராகப் பகுதியில் தொடங்கப்பட்டுள்ளதாக தெரிவித்த அமைச்சர் செஞ்சி மஸ்தான் திராவிட மாடல் ஆட்சியில் செஞ்சி தொகுதியில் 6000 நபர்களுக்கு கடந்த மூன்று ஆண்டுகளில் இலவச வீட்டு மனை பட்டாக்கள் வழங்கப்பட்டு உள்ளதாகஅமைச்சர் செஞ்சி மஸ்தான் பெருமைப்பட தெரிவித்தார்.

நிகழ்ச்சியில் ஆரணி நாடாளுமன்ற உறுப்பினர் தரணிவேந்தன், ஒன்றிய செயலாளர்கள் நெடுஞ்செழியன், சாந்தி சுப்ரமணியன், ஒன்றிய துணை சேர்மன் விஜய லட்சுமி முருகன், வட்டாட்சியர் முகமது அலி, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் சிவ சண்முகம், சையத் முகமது, மாவட்ட கவுன்சிலர் செல்வி ராம சரவணன், ஊராட்சி மன்ற தலைவர்கள் கூடுவாண்டி ஜோதிலட்சுமி இளவரசன், பறையன் தாங்கள் ஏழுமலை, உள்ளிட்ட உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் திமுக நிர்வாகிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



தஞ்சை நாடாளுமன்றத் தொகுதியில் இந்தியா கூட்டணி சார்பில் போட்டியிட்டு அதிக வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற கழக வேட்பாளர் ச.முரசொலி தஞ்சை தெற்கு மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியத்தில் வாக்காளர்களுக்கும், கழகத் தோழர்களுக்கும், கூட்டணி கட்சியினருக்கும் நன்றி தெரிவித்தார். உடன் பேராவூரணி சட்டமன்ற உறுப்பினர் என்.அசோக்குமார், ஒன்றியக் கழகச் செயலாளர்கள், கழக முன்னோடிகள், பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.



முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் உளுந்தூர்பேட்டை சட்டமன்றத் தொகுதி திருவெண்ணை நல்லூர் ஒன்றியம் ஆலங்குப்பம் அரசு உதவி பெறும் பள்ளியில் கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்ட கழக அவைத் தலைவர்,தமிழ்நாடு கால்நடை மருத்துவ பல்கலைக்கழகம் ஆட்சி மன்ற குழு உறுப்பினர், ஏ.ஜெ. மணிகண்ணன் எம்.எல்.ஏ. துவக்கி வைத்து மாணவர்களுடன் தரையில் அமர்ந்து உணவு ஊட்டி விட்டார். இதில் மாவட்ட திட்ட அலுவலர் மற்றும் வட்டார கல்வி அலுவலர், ஆசிரியர்கள்,ஊராட்சி மன்ற தலைவர் ராமையா,மாவட்ட விவசாய அணி தலைவர் பத்மநாபன், முன்னாள் ஒன்றிய பெருந்தலைவர் பி.வி.பால சுப்பிரமணியன், முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர் ஆர்.ஆர். மற்றும் கழக நிர்வாகிகள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

---

### மாணவர்கள் கல்வியில் சிறந்து விளங்கிட

## பல்வேறு கல்வி சார்ந்த திட்டங்களை செயல்படுத்துகிறார் முதல்வர்!

### திருமயத்தில் அமைச்சர் எஸ்.ரகுபதி பேச்சு!

*புதுக்கோட்டை, ஜூலை -19*

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 16.07.2024 அன்று காணொலிக்காட்சி வாயிலாக உயர்கல்வித்துறை சார்பில், புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் ஊராட்சி ஒன்றியம், துளையனூர் கிராமத்தில், ரூ.12.46 கோடி மதிப்பீட்டில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி கட்டடத்தினையும் மற்றும் ஆலங்குடி பேரூராட்சி, கிழாத்தூர் கிராமத்தில், ரூ.12.40 கோடி மதிப்பீட்டில் புதிதாகக் கட்டப் பட்டுள்ள அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி கட்டடத்தினையும் திறந்து வைத்தார்கள்.

அதனைத்தொடர்ந்து, புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், சட்டம், நீதி மன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி , மாவட்ட ஆட்சித்தலைவர் ஐ.சா.மெர்சி ரம்யா, தலைமையில் கலந்துகொண்டார்.

பின்னர் அமைச்சர் எஸ். ரகுபதி தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மாணவ, மாணவிகள் கல்வியில் சிறந்து விளங்க வேண்டும் என்ற அடிப்படையில் பல்வேறு கல்வி சார்ந்த திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். அந்தவகையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் காணொலிக்காட்சி வாயிலாக திருமயம் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி கட்டடத்தினையும் மற்றும் ஆலங்குடி அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி கட்டடத்தினையும் திறந்து வைத்தார்கள்.

திருமயம் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி கட்டடமானது, தரைதளம் 1551.00 ச.மீ., முதல் தளம் 1529.00 ச.மீ., இரண்டாம் தளம் 1529.00 ச.மீ என பொத்தம் 4609.00 சதுர மீட்டர் பரப்பளவுடன் கட்டடப்பட்டுள்ளது. இக்கட்டடத்தின் தரைதளத்தில் கல்லூரி முதல்வர் அறை, அலுவலக அறை, ஆவண பாதுகாப்பு அறை, இரண்டு வகுப்பறைகள், சுகாதார மையம், மாணவர் கூட்டுறவு



அங்காடி, நூலகம் மற்றும் நூலகர் அறை தனித்தனியே அமைக்கப்பட்டுள்ளது. முதல் தளத்தில் வகுப்பறைகள், ஆய்வகங்கள், கணினி அறை, கருத்தரங்கு கூடம், துறைத்தலைவர் அறை, ஆசிரியர் அறை தனித்தனியே அமைக்கப்பட்டுள்ளது. இரண்டாம் தளத்தில் வகுப்பறைகள், உடல் இயக்குனர் அறை, ஆய்வகங்கள், கணினி ஆய்வகம் மற்றும் ஆசிரியர் அறை என தனித்தனியே அமைக்கப்பட்டுள்ளது.

ஆலங்குடி அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி கட்டடமானது, தரைதளம் 1551.00 ச.மீ., முதல் தளம் 1529.00 ச.மீ., இரண்டாம் தளம் 1108.00 ச.மீ என மொத்தம் 4188.00 சதுர மீட்டர் பரப்பளவுடன் கட்டடப்பட்டுள்ளது. இக்கட்டடத்தின் தரைதளத்தில் கல்லூரி முதல்வர் அறை, அலுவலக அறை, ஆவண பாதுகாப்பு அறை, இரண்டு வகுப்பறைகள், சுகாதார மையம், மாணவர் கூட்டுறவு அங்காடி, நூலகம் மற்றும் நூலகர் அறை தனித்தனியே அமைக்கப்பட்டுள்ளது. முதல் தளத்தில் வகுப்பறைகள், ஆய்வகங்கள், கணினி அறை, கருத்தரங்கு கூடம், துறைத்தலைவர் அறை, ஆசிரியர் அறை தனித்தனியே அமைக்கப்பட்டுள்ளது. இரண்டாம் தளத்தில் வகுப்பறைகள், உடல் இயக்குனர் அறை மற்றும் ஆசிரியர் அறை என தனித்தனியே அமைக்கப்பட்டுள்ளது.

எனவே மாணவ, மாணவிகள் அனைவரும் தமிழக அரசால் செயல்படுத்தப்படும் இதுபோன்ற பல்வேறு கல்வி சார்ந்த திட்டங்களை உரிய முறையில் பயன்படுத்திக் கொண்டு கல்வியில் சிறந்து விளங்கிட வேண்டும் எனவும் அமைச்சர் எஸ்.ரகுபதி தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், முன்னாள் அரசு வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன், புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் வை.முத்துராஜா, மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் ஜெயலட்சுமி தமிழ்ச்செல்வன், மண்டல இணை இயக்குநர் (கல்லூரிகள்) பொன் முத்துராம லிங்கம், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ராம.சுப்புராம், உதவி செயற்பொறியாளர் (பொ.ப.து.) சிந்தனை செல்வி, மாமன்னர் கல்லூரி முதல்வர் புவனேஸ்வரி, அரிமளம் ஒன்றியக்குழுத் தலைவர் மேகலாமுத்து, பொன்னமராவதி ஒன்றியக்குழுத் தலைவர் சுதா அடைக்கலமணி, அரிமளம் பேரூராட்சித் தலைவர் மாரிக்கண்ணு முத்துக்குமார், ஒன்றியக்குழு உறுப்பினர் அழகு (எ) சிதம்பரம், திருமயம் கல்லூரி முதல்வர் முனைவர் சண்முகவள்ளி, முன்னாள் ஒன்றியக் குழுத் தலைவர் பொன்.இராமலிங்கம், பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவர் அ.முத்து, வட்டாட்சியர் புவியரசன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் இரா.சங்கர், பி.வெங்கடேசன், உதவிப் பொறியாளர் சுதர்சன், உதவி மின் பொறியாளர் கமால் மற்றும் கணேசன், கல்லூரி பேராசிரியர்கள், மாணவ, மாணவிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.



நாகை மாவட்டம் நாகை ரயில் நிலையம் அருகே மறைமலை அடிகளார் சிலை 55 ஆண்டுகளுக்கு முன் அமைக்கப்பட்டு முத்தமிழ் அறிஞர் கலைஞரால் திறந்து வைக்கப்பட்டது. மறைமலை அடிகளார் சிலை இருந்தஇடத்தில் ரயில்வே மேம்பாலம் வர உள்ளதை அடுத்து அங்கிருந்த மறைமலை அடிகளார் சிலை புதுப்பிக்கப்பட்டு நாகை வெளிப்பாளையம் தம்பிதுரை பூங்காவில் அமைக்கப்பட்டது. இந்த சிலையை நாகை மாவட்டக் கழகச் செயலாளரும் தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத் தலைவருமான எம். கௌதமன் திறந்து வைத்தார். உடன் நாகை மாவட்ட ஆட்சி தலைவர் ஜானி டாம் வர்கீஸ், நாகை நகரக் கழகச் செயலாளரும், நகர் மன்ற தலைவருமான இரா.மாரிமுத்து, நாகூர் நகரச் செயலாளர் எம்.ஆர். செந்தில்குமார், மாவட்ட சார்பணிகளின் அமைப்பாளர்கள் ஆர்.ஏ.டி .அண்ணாதுரை, எஸ். பால்ராஜ், நாகை நகரக் கழக நிர்வாகிகள் பி. திலகர், அபுபக்கர் மற்றும் பலர் உள்ளனர்.